**பிரஸார் பாரதி**

**அகில இந்திய வானொலி, சென்னை-4**

**21 11 2025 FRIDAY 7.15 PM**

**ஆகாஷவாணி**

***<u>தலைப்புச் செய்திகள்</u>***

1. **நாட்டின் வளமான கலாச்சார பாரம்பரியத்தை மக்கள் அறிந்து கொள்வதற்கு மத்திய அரசு சிறப்பு முயற்சிகளை மேற்கொண்டிருப்பதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.**

2. **பீகார் தேர்தல் வெற்றி பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வைக்கு கிடைத்த வெற்றி என்று மத்திய அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.**

3. **இந்தியாவின் செமி கண்டெக்டர் திட்டங்களுக்கு சிங்கப்பூர் அரசு ஆதரவு அளிக்க முன்வந்திருப்பதாக மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.**

4. **பாகிஸ்தானில் பாய்லர் தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்தில் 15 பேர் உயிரிழந்தனர்.**

5. **17 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கால்பந்து தகுதி சுற்றுப்போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.**

**இனி விரிவான செய்திகள் ---**

<<<<<<>>>>>>

நாட்டின் வளமான கலாச்சார பாரம்பரியத்தை மக்கள் அறிந்து கொள்வதற்கு மத்திய அரசு சிறப்பு முயற்சிகளை மேற்கொண்டிருப்பதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

தெலங்கானா மாநிலம் ஹைதராபாதில் இந்திய கலை விழாவின் இரண்டாவது ஆண்டு நிகழ்ச்சியை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

கடந்த ஆண்டு தொடங்கப்பட்ட இந்த விழாவில் வடகிழக்கு மாநிலங்களின் வளமான கலாச்சார பாரம்பரியத்தை அரசு அறிமுகப்படுத்தியதாக தெரிவித்தார்.

இந்த முறை மேற்கு மாநிலங்களின் கலாச்சார பாரம்பரியத்தை மக்கள் பார்வையிடவும், அவற்றை அறிந்து கொள்ளவும் வாய்ப்பு கிடைத்திருப்பதாக குடியரசுத் தலைவர் கூறினார்.

புதுதில்லியில் உள்ள குடியரசுத் தலைவர் மாளிகையில் இடம்பெறும் இந்த கண்காட்சி, சிம்லா, ஹைதராபாத் மற்றும் டேராடூனில் உள்ள குடியரசுத் தலைவர் மாளிகைகளிலும் இடம்பெற்றிருக்கும் என்று அவர் தெரிவித்தார்.

நாட்டின் கலாச்சார வரலாற்றை அதிக அளவிலான மக்கள் அறிந்துகொள்ளும் வகையில் இதுபோன்ற கலை விழாக்கள் நடத்தப்பட்டு வருவதாகவும் திருமதி திரௌபதி முர்மு கூறினார்.

<<<<<<>>>>>>

அடுத்த நிதியாண்டிற்கான பட்ஜெட்டிற்கு முந்தைய ஆலோசனைக்கூட்டம் நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

நகர்ப்புற மயமாக்கல் துறையை சேர்ந்த பல்வேறு தரப்பினர் மற்றும் நிபுணர்களுடன் நிதியமைச்சர் விரிவான ஆலோசனை நடத்தினார்.

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை செயலாளர், மத்திய அரசின் தலைமை பொருளாதார ஆலோசகர் மற்றும் நிதியமைச்சகத்தின் உயரதிகாரிகள் இந்த கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

முன்னதாக, நடைபெற்ற ஆலோசனைக்கூட்டத்தில், கட்டமைப்பு, எரிசக்தித்துறையை சேர்ந்த நிபுணர்களுடன் நிதியமைச்சர் ஆலோசனை நடத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

கிழக்கு மாநிலங்களின் வளர்ச்சி இல்லாமல், இந்தியாவின் வளர்ச்சி சாத்தியமில்லை என்று மத்திய அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

பீகார் சட்டப்பேரவைத் தேர்தலில் பிஜேபி பொறுப்பாளராக செயல்பட்டு, மிகப்பெரிய வெற்றியை தேசிய ஜனநாயக கூட்டணி அடைந்த பின்னர் முதல் முறையாக ஒடிஷா மாநிலம் புவனேஷ்வருக்கு இன்று திரு தர்மேந்திர பிரதான் வந்தார்.

அவருக்கு பிஜேபி சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாட்டின் கிழக்குப்பகுதி மாநிலங்களின் வளர்ச்சியை கருத்தில்கொண்டு பிரதமர் திரு நரேந்திர மோடி பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருவதாக கூறினார்.

பீகார் தேர்தல் வெற்றி பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வைக்கும், திரு நிதிஷ்குமாரின் தலைமை பண்புக்கும் கிடைத்த வெற்றி என்று தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

இந்தியாவின் செமி கண்டெக்டர் திட்டங்களுக்கு சிங்கப்பூர் செமி கண்டெக்டர் தொழிற்சங்கம் ஆதரவு அளிக்க

முன்வந்திருப்பதாக மத்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், செமி கண்டெக்டர் திட்டங்கள் தொடர்பாக சிங்கப்பூர் நாட்டின் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களுடன் தாம் விரிவான ஆலோசனை நடத்தியதாக கூறியுள்ளார்.

சிங்கப்பூர் துணை பிரதமரும், வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சருமான திரு Gan Kim Yong-ஐ தாம் சந்தித்து பேசியதாகவும், வளர்ந்துவரும் தொழில்நுட்பங்கள் உள்ளிட்ட இந்தியாவுடனான இருதரப்பு ஒத்துழைப்பு குறித்தும் ஆலோசனை நடத்தியதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தின் இரண்டாம் கட்டப்பணிகள் தொடங்கியதில் இருந்து இதுவரை 50 கோடியே 43 லட்சம் விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இந்த பணிகள் கடந்த நான்காம் தேதி தொடங்கி, ஒன்பது மாநிலங்கள் மற்றும் மூன்று யூனியன் பிரதேசங்களில் நடைபெற்று வருகின்றன.

தமிழகம், கேரளா, மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான் உள்ளிட மாநிலங்களிலும், புதுச்சேரி, லட்சத்தீவு, அந்தமான் நிக்கோபார் தீவுகளிலும் முழுவீச்சில் இப்பணிகள் நடைபெற்று வருவதாக தேர்தல் ஆணைய அறிக்கை தெரிவிக்கிறது.

இறுதி வாக்காளர் பட்டியல் அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் 7-ஆம் தேதி வெளியிடப்படும் என்றும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

<<<<<<<>>>>>>>

தலைநகர் தில்லியில் பாதுகாப்பை உறுதிபடுத்த தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தில்லி காவல் ஆணையர் திரு Satish Golcha, தலைமைச்செயலாளர் திரு Rajiv Varma ஆகியோரை துணை நிலை ஆளுநர் திரு வி கே சக்சேனா வலியுறுத்தியுள்ளார்.

அண்மையில் தில்லி செங்கோட்டை அருகே நிகழ்ந்த கார் குண்டுவெடிப்பு சம்பவத்தை தொடர்ந்து அவர்,

தலைமைச்செயலாளர் உள்ளிட்ட உயரதிகாரிகளுக்கு எழுதியுள்ள கடிதத்தில் இதனை கேட்டுக்கொண்டுள்ளார்.

அம்மோனியம் நைட்ரேட் ரசாயனப் பொருளை இருப்பு வைத்திருப்போர் அதற்குரிய உரிமம் பெற்றுள்ளார்களா என்பது குறித்தும், ட்ரோன்கள் விற்பனை மற்றும் அவற்றை வாங்குவோர் குறித்த தகவல்கள் போன்றவற்றை சேகரித்து வைக்க வேண்டும் என்றும் துணை நிலை ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மூன்று வாரங்களில் அறிக்கை அளிக்க வேண்டும் என்றும் திரு வி கே சக்சேனா அதில் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<>>>>>>>

மீன்வளத்துறையை மேம்படுத்தும் நோக்கிலும், மீன்களின் விற்பனையை அதிகரிக்கும் நோக்கிலும் மத்திய அரசு பிரதமரின் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

தமிழகத்தின் நாகை மாவட்டத்தில் மதிப்புக்கூட்டப்பட்ட மீன்கள் விற்பனை மூலம், மீனவர்கள் அதிக பயனடைந்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Voice Byte – செல்வன் ஜெபராஜ் - 36 Sec. )*

<<<<<<<>>>>>>>

**அஞ்சல் சேமிப்பு வங்கியின் டிஜிட்டல் மற்றும் நிதி பாதுகாப்பு கட்டமைப்பு வசதிகளை மத்திய தொலைத்தொடர்புத்துறை இணையமைச்சர் டாக்டர் சந்திரசேகர் பெம்மசாணி இன்று ஆய்வு செய்தார்.**

**புதுதில்லியில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் அதிநவீன தொழில்நுட்ப உதவியுடன் அஞ்சல் வங்கி சேவையில் வருவாய் இழப்பை தடுக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அதிகாரிகளை அவர் கேட்டுக்கொண்டார்.**

**அதிக சேமிப்பு கணக்குகள் உள்ள அஞ்சல் அலுவலகங்களில் தேவையான கணக்கீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், அஞ்சல் அலுவலக சேவைகளை முற்றிலுமாக கணினி மயமாக்குவதால், மனித தவறுகளை அகற்ற முடியும் என்றும் டாக்டர் சந்திரசேகர் பெம்மசாணி குறிப்பிட்டார்.**

<<<<<<<>>>>>>>

**ஜம்மு காஷ்மீரின் Budgam, Nagrota சட்டப்பேரவை தொகுதிகளில் வெற்றிபெற்றவர்கள் இன்று பதவியேற்றுக்கொண்டனர்.**

ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவைத் தலைவர் திரு அப்துல் ரஹீம் புதிதாக தேர்வு செய்யப்பட்ட சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு ஜம்முவில் பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

அண்மையில் நடைபெற்ற இடைத்தேர்தலில் Nagrota தொகுதியில் பிஜேபி-யின் Devyani Rana-வும், Budgam-மில் மக்கள் ஜனநாயக கட்சியின் Aga Syed Muntazir Mehdi –ம் வெற்றிபெற்றனர்.

<<<<<<<>>>>>>>

பூஞ்ச் பகுதி மக்களின் நலன்களை பாதுகாக்கவும், அங்கு நீண்டகால வளர்ச்சிக்கும் ஜம்மு காஷ்மீர் அரசு உறுதிபூண்டிருப்பதாக துணை நிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா தெரிவித்துள்ளார்.

ஆபரேஷன் சிந்தூர் மற்றும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பூஞ்ச் பகுதியில் மறுவாழ்வு திட்டங்களுக்கான பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, அப்பகுதி மக்களுடன் அவர் கலந்துரையாடினார்.

பாகிஸ்தானின் குண்டுவீச்சு தாக்குதல் மற்றும் கடந்த மாதத்தில் ஏற்பட்ட வெள்ளம், நிலச்சரிவால் வாழ்வாதாரத்தை

இழந்துள்ள குடும்பங்களுக்கு உதவும் வகையில் இந்த திட்டங்களை அரசு நிறைவேற்ற இருப்பதாக அவர் தெரிவித்தார்.

இந்த பகுதியில் இயல்பு நிலையை கொண்டுவரவும், கட்டமைப்பை மேம்படுத்தவும் தேவையான நடவடிக்கைகளை ஜம்மு காஷ்மீர் அரசு மேற்கொள்ளும் என்றும் திரு திரு மனோஜ் சின்ஹா உறுதியளித்தார்.

<<<<<<>>>>>>>

பாகிஸ்தானில் பாய்லர் தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்தில் 15 பேர் உயிரிழந்தனர்.

Faisalabad மாகாணத்தில் மாலிக்பூர் என்ற இடத்தில் உள்ள தொழிற்சாலையில் இன்று காலை இந்த விபத்து நேரிட்டதாகவும், அருகில் இருந்த கட்டிடங்கள் இடிந்து விழுந்ததாகவும், மீட்புக்குழுவினர் தெரிவித்தனர்.

விபத்து பகுதியிலிருந்து உயிரிழந்தவர்களின் உடல்கள் மீட்கப்பட்டதாகவும், அவர்கள் தெரிவித்தனர்.

விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.

<<<<<<>>>>>>>

17 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கால்பந்து தகுதி சுற்றுப்போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

அபிஷேக் குமார், Rahan Ahmad உள்ளிட்ட 23 பேர் இதில் இடம்பெற்றுள்ளனர்.

இப்போட்டி அகமதாபாதில் நாளை தொடங்குகிறது

----------

வளரும் வீரர்களுக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா ஏ அணிக்கு எதிரான முதல் அரையிறுதி ஆட்டத்தில் பங்களாதேஷ் ஏ அணி சூப்பர் ஓவரில் வெற்றிபெற்றது.

முதலில் விளையாடிய பங்களாதேஷ் ஏ அணி 6 விக்கெட் இழப்பிற்கு 194 ரன் எடுத்தது.

இந்தியா ஏ அணியும் அதே 194 ரன்னை எடுத்ததால், சூப்பர் ஓவர் முறை கொண்டுவரப்பட்டது.

இதில் இந்தியா ஏ அணி ரன் ஏதும் எடுக்காமல், 2 விக்கெட்டுகளை இழந்தது.

பங்களாதேஷ் ஏ அணி ஒரு விக்கெட்டை இழந்து ஒரு ரன் எடுத்து வெற்றிபெற்றது.

<<<<<<END>>>>>>